**ABSTRACT**

Forests – Theni district – Uthamapalayam taluk – No.48, Kanniservaipatty village – Erasakkanaickanur extension forest block - Survey No.205/2 - An extent of 3.36.5 Hectare – Declaration under section 4 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882) – Notification - Approved – Orders - Issued.

---

**Environment, Climate Change and Forests (FR.13) Department**

**G.O.(Ms) No.126** **Dated: 29.07.2024**

**குரோதி, ஆடி - 13**

**திருவள்ளுவர் ஆண்டு - 2055**

**Read:**

From the Principal Chief Conservator of Forests (Head of Forest Force), Chennai-32, Letter No.TS2/27818/2023, Dated: 15.03.2024.

-------

**ORDER**:

The proposal received from the Principal Chief Conservator of Forests for publication of Notification for notifying an area of 3.36.5 Hectare situated in Survey No.205/2, No.48, Kanniservaipatty village, Erasakkanaickanur extension forest block, Uthamapalayam taluk, Theni district under section 4 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), is approved and accordingly the appended Notifications will be published in English in the Tamil Nadu Government Gazette, Dated 28.08.2024 and in Tamil in the Theni District Gazette, Dated 11.09.2024.

2. The Works Manager, Government Central Press, Chennai-1 is requested to ensure that the Notifications are published in the Tamil Nadu Government Gazette, Dated 28.08.2024. On receipt of Notifications, the Branch Manager, Government Branch Press, Madurai is requested to take action to publish them in the Theni District Gazette.

3. They shall ensure that after publication, printed copies of said Notification in English and Tamil are communicated to the Officers as shown in the Annexure to this order.

..2.

4. The District Collector, Theni and the Principal Chief Conservator of Forests are requested to watch the publication of the Notifications and bring to the notice of the Government, delay if any, in publication.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**P.SENTHILKUMAR**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

To
The Works Manager,
Government Central Press, Chennai – 1.
The Branch Manager,
Government Branch Press, Madurai.
The Additional Chief Secretary/
Commissioner of Land Administration, Chennai – 5.
The Principal Chief Conservator of Forests
(Head of Forest Force),
Chennai – 32.
The District Collector, Theni.
The Chief Conservator of Forests, and Field Director,
Srivilliputhur Megamalai Tiger Reserve, Madurai
The Deputy Director, Megamalai.
The Forest Settlement Officer, Bodinaickanur.

**Copy to**:-
The Revenue and Disaster Management (L.D.4) Department, Chennai – 9.
The Law (E,CC&F-Sty) Department, Chennai – 9.
The Private Secretary to Principal Secretary to Government,
Environment, Climate Change and Forest Department, Chennai-9.
Stock File/Spare Copy.

**//FORWARDED BY ORDER//**

S. Mohamed Yusuf 29/7/2024
SECTION OFFICER
29/07/2024

**Annexure to G.O.(Ms)No.126**

**Environment, Climate Change and Forest (FR.13) Department,**

**Dated: 29.07.2024**

| Sl. No. | Designation and Address of the Officers | English | Tamil |
|---|---|---|---|
| 1. | The Principal Secretary to Government, Environment, Climate Change and Forest Department, Chennai – 600 009. | 2 | 2 |
| 2. | The Principal Chief Conservator of Forests (Head of Forest Force), Chennai - 600 032. | 3 | 3 |
| 3. | The District Collector, Theni | 2 | 2 |
| 4. | The Chief Conservator of Forests, and Field Director, Srivilliputhur Megamalai Tiger Reserve, Madurai. | 5 | 5 |
| 5. | The Deputy Director, Megamalai | 12 | 12 |
| 6. | The Forest Settlement Officer, Bodinaickanur | 8 | 8 |

**P.SENTHILKUMAR**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

//True Copy//

S. Mohamed Yusuf 29/7/2024
Section Officer
29/07/2024

## APPENDIX.

## NOTIFICATION – I.

In exercise of the powers conferred by section 4 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), the Governor of Tamil Nadu hereby declares that it is proposed to constitute the land within the boundaries specified in the Schedule below as a reserved forest and appoints the Special Tahsildar (Forest Settlement), Bodinaickanur, ex-officio to be the Forest Settlement Officer to exercise the powers under clause (c) of the said section in respect of the said area.

## THE SCHEDULE.

| | | | |
|---|---|---|---|
| 1. | Name of the district | : | Theni |
| 2. | Name of the taluk | : | Uthamapalayam |
| 3. | Number and name of the village | : | 48, Kanniservaipatti |
| 4. | Name of the forest block | : | Erasakkanaickanaur extension forest block |
| 5. | Survey number of the forest block | : | 205/2 |
| 6. | Total Extent of forest block | : | 3.36.5 Hectare |

## BOUNDARIES.

**North**.- The boundary starts from the tri-junction point of Survey Numbers 205/1, 205/2 of No.48, Kanniservaipatti village and No.26, Alagapuri village and generally runs towards east along the southern boundary of No.26, Alagapuri village and reaches the bi-junction point of Survey No.205/2 of No.48, Kanniservaipatti village and No.26, Alagapuri village.

**East**.- Thence, the boundary generally runs towards south along the western boundary of No.26, Alagapuri village and Narasingapuram Hills and reaches the tri-junction point of Survey Numbers 185, 205/2 of No.48, Kanniservaipatti village and Narasingapuram Hills.

**South**.- Thence, the boundary generally runs towards Northwest, North, West, northwest along the northern, eastern and northern boundary of Survey No.185 of No.48, Kanniservaipatti village and reaches the tri-junction point of Survey Numbers 185, 205/1 and 205/2 of No.48, Kanniservaipatti village.

**West**.- Thence, the boundary generally runs towards north along the eastern boundary of Survey No.205/1 of No.48, Kanniservaipatti village and reaches the starting point.

## NOTIFICATION – II.

In exercise of the powers conferred by the last paragraph of section 4 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), the Governor of Tamil Nadu hereby appoints the Deputy Director, Forest Department, Megamalai Division as ex-officio to attend on behalf of the Government at the inquiry prescribed under Chapter-II of the said Act, in respect of the land of Erasakkanaickanaur Extension forest block proposed to be constituted as a reserved forest.

..6.

**NOTIFICATION – III.**

In exercise of the powers conferred by section 14 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), the Governor of Tamil Nadu hereby appoints the Personal Assistant (General) to the Collector of Theni District, Theni, ex-officio to hear appeals, if any, against the orders passed under sections 11, 12 and 13 of the said Act, in respect of the land of Erasakkanaickanaur Extension forest block proposed to be constituted as a reserved forest.

**P.SENTHILKUMAR**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

//True Copy//

S. Mohamed Yusuf 29/7/2024
Section Officer

29/07/2024

## சுருக்கம்

வனம் – தேனி மாவட்டம் – உத்தமபாளையம் வட்டம் - எண்.48, கன்னிசேர்வைப்பட்டி கிராமம் – எரசக்கநாயக்கனூர் விரிவாக்கம் வன வட்டாரம் – நில அளவை எண்.205/2-ல் உள்ள 3.36.5 எக்டேர் நிலம் – தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 4-ன் கீழ் அறிவிக்கை செய்தல் – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

### சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம். 13) துறை

**அரசாணை (நிலை) எண். 126** — **நாள்: 29.07.2024**

**குரோதி, ஆடி - 13**

**திருவள்ளுவர் ஆண்டு - 2055**

**படிக்க:**

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை-32, கடித எண்.டிஎஸ்2/27818/2023, நாள். 15.03.2024.

=======

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவுடன் பெறப்பட்ட தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், எண்.48, கன்னிசேர்வைப்பட்டி கிராமம், எரசக்கநாயக்கனூர் விரிவாக்கம் வன வட்டாரம், நில அளவை எண்.205/2-ல் உள்ள 3.36.5 எக்டேர் நிலத்தினை தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882), பிரிவு 4-ன் கீழான அறிவிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது. அதனை தமிழ்நாடு அரசிதழ் நாள் 28.08.2024-ல் ஆங்கிலத்திலும், தேனி மாவட்டம் அரசிதழ் நாள் 11.09.2024-ல் தமிழிலும் வெளியிடும் பொருட்டு இத்துடன் இணைக்கப்படுகிறது.

2. 28.08.2024-ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுவதை உறுதி செய்யுமாறு சென்னை அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அரசிடமிருந்து அறிவிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அதனை தமிழில் தேனி மாவட்ட அரசிதழில் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறும் மதுரை அரசு கிளை அச்சக மேலாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

..2.

3. மேலும், அச்சிடப்பட்ட தமிழ், ஆங்கில அறிவிக்கை நகல்களை இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க மைய மற்றும் கிளை அச்சக பணி மேலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. அறிவிக்கையானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதை தேனி மாவட்ட ஆட்சியர் / முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கண்காணித்து அறிவிக்கை வெளியிடுவதில் காலதாமதம் இருப்பின், அரசின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப.செந்தில்குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம், சென்னை -1
கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், மதுரை.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையர்,
நில நிர்வாகம், சென்னை - 5
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்),
சென்னை – 32.
மாவட்ட ஆட்சியர், தேனி.
தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர்
ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், மதுரை.
துணை இயக்குநர், மேகமலை.
வன நிர்ணய அலுவலர், போடிநாயக்கனூர்.

<u>நகல்</u>:-
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (LD-IV) துறை,
சென்னை-9.
சட்டத் (E,CC&F-Sty) துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர்,
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை,
சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

29/7/2024
பிரிவு அலுவலர்
29/07/2024

**அரசு ஆணை (நிலை) எண். 126**

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.13) துறை,**

**நாள். 29.07.2024-ன் இணைப்பு**

| வ. எண். | பதவி மற்றும் அலுவலக முகவரி | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|
| 1. | அரசு முதன்மைச் செயலாளர்,<br>சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை,<br>சென்னை – 9. | 2 | 2 |
| 2. | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்,<br>(வனத்துறைத் தலைவர்), சென்னை-32. | 3 | 3 |
| 3. | மாவட்ட ஆட்சியர், தேனி | 2 | 2 |
| 4. | தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர்<br>ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், மதுரை. | 5 | 5 |
| 5. | துணை இயக்குநர், மேகமலை. | 12 | 12 |
| 6. | வன நிர்ணய அலுவலர், போடிநாயக்கனூர் | 8 | 8 |

**ப.செந்தில்குமார்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

//உண்மை நகல்//

29/7/2024
பிரிவு அலுவலர்
29/07/2024

**பிற்சேர்க்கை.**

**அறிவிக்கை - I.**

1882-ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 4-ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர், அவர்கள் கீழே உள்ள விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளுக்குட்பட்ட நிலப்பகுதியை "காப்பு வனமாக" அமைக்கக் கருதியிருப்பதாக இதனால் அறிவிக்கிறார். மேலும், அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில், மேற்சொன்ன பிரிவின் (c) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்த போடிநாயக்கனூர் தனி வட்டாட்சியரை (வன நிர்ணயம்) அலுவல் முறையில் வன நிர்ணய அலுவலராக இதனால் நியமிக்கிறார்.

**விவர அட்டவணை.**

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்டத்தின் பெயர் | : | தேனி |
| 2. | வட்டத்தின் பெயர் | : | உத்தமபாளையம் |
| 3. | கிராமத்தின் எண் மற்றும் பெயர் | : | 48, கன்னிசேர்வைப்பட்டி |
| 4. | வனவட்டாரத்தின் பெயர் | : | எரசக்கநாயக்கனூர் விரிவாக்கம் வன வட்டாரம் |
| 5. | நில அளவை எண் | : | 205/2 |
| 6. | வனவட்டாரத்தின் மொத்தப்பரப்பளவு | : | 3.36.5 எக்டர் |

**நாற்புற எல்லைகள்.**

**வடக்கு.**- இவ்வனவட்டாரத்தின் எல்லையானது எண்.48, கன்னிசேர்வைப்பட்டி கிராம நில அளவை எண்கள் 205/1, 205/2 மற்றும் எண்.26, அழகாபுரி கிராமம் ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியில் தொடங்கி எண்.26, அழகாபுரி கிராமத்தின் தெற்கு எல்லை நெடுகிலும் பொதுவாக கிழக்கு நோக்கிச் சென்று எண்.48, கன்னிசேர்வைப்பட்டி கிராம நில அளவை எண்.205/2 மற்றும் எண்.26, அழகாபுரி கிராமம் ஆகியவை சந்திக்கும் இருமுனை சந்திப்பு புள்ளியை அடைகிறது.

**கிழக்கு.**- பின்னர் இவ்வெல்லையானது, எண்.26, அழகாபுரி கிராமம் மற்றும் நரசிங்கபுரம் குன்று ஆகியவற்றின் மேற்கு எல்லை வழியாக பொதுவாக தெற்கு நோக்கிச் சென்று எண்.48, கன்னிசேர்வைப்பட்டி கிராம நில அளவை எண்கள் 185, 205/2 மற்றும் நரசிங்கபுரம் குன்று ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது.

**தெற்கு**.- பின்னர் இவ்வெல்லையானது, எண்.48, கன்னிசேர்வைப்பட்டி கிராம நில அளவை எண்.185-ன் வடக்கு, கிழக்கு மற்றும் வடக்கு எல்லை நெடுகிலும் பொதுவாக வடமேற்கு, வடக்கு, மேற்கு, வடமேற்கு நோக்கிச் சென்று எண்.48, கன்னிசேர்வைப்பட்டி கிராம நில அளவை எண்கள் 185, 205/1 மற்றும் 205/2 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது.

**மேற்கு**.- பின்னர் இவ்வெல்லையானது எண்.48, கன்னிசேர்வைப்பட்டி கிராம நில அளவை எண்.205/1-ன் கிழக்கு எல்லைகள் வழியாக பொதுவாக வடக்கு நோக்கி சென்று ஆரம்பப் புள்ளியை அடைகிறது.

## அறிவிக்கை-II.

1882-ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 4-ஆம் பிரிவின் கடைசி பத்தியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், காப்பு வனமாக அமைக்க கருதியுள்ள எரசக்கநாயக்கனூர் விரிவாக்கத்தைப் பொறுத்தவரையில், மேற்சொன்ன சட்டத்தின் II-ஆம் அத்தியாயத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள விசாரணையில் பதவி நிலையில் அரசு சார்பாக கலந்து கொள்ள வனத்துறை மேகமலை கோட்டம், துணை இயக்குனரை அலுவல் முறையில் இதனால் நியமிக்கிறார்.

## அறிவிக்கை-III.

1882-ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 14-ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், காப்பு வனமாக அமைக்க கருதியுள்ள எரசக்கநாயக்கனூர் விரிவாக்கத்தைப் பொறுத்த வரையில் மேற்சொன்ன சட்டத்தின் 11, 12 மற்றும் 13-ஆம் பிரிவுகளின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளுக்கெதிராக மேல்முறையீடுகள் எவையேனும் செய்யப்பட்டிருப்பின், அவற்றை விசாரணை செய்ய தேனி மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரை (பொது) அலுவல் முறையில் இதனால் நியமிக்கிறார்.

ப.செந்தில்குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

29/7/2024
பிரிவு அலுவலர்
29/07/2024